**செ.வெ.எண்: 63** **நாள்:28.10.2021**

**பத்திரிக்கைச் செய்தி**

2021-22 ரபி பருவத்தில் நெல் பயிர்களுக்கான திருந்திய பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டம்(PMFBY)

அன்பார்ந்த விவசாயிகளுக்கு,

பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டம் மூலம் விவசாயிகளுக்கு எதிர்பாராமல் ஏற்படும் இழப்புகளிலிருந்து பாதுகாக்கவும், பண்ணை வருவாயை நிலைப்படுத்தவும் மற்றும் அதிநவீன தொழில்நுட்பங்கள் கடைபிடிப்பதை ஊக்குவிக்கவும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2021-22 ரபி பருவத்தில் சாகுபடி செய்யப்படும் நெற்பயிர்க்கு காப்பீடு செய்ய அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. சம்பா பட்டத்தில் இதுவரை 51266 ஹெக்டேர் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் PMFBY திட்டத்தின்கீழ் பொது சேவை மையங்கள் (Common Service Centre), வணிக வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் 20821 ஹெக்டேர் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் நடப்பாண்டு இத்திட்டம் (IFFCO TOKIO GENERAL INSURANCE COMPANY LIMITED) இப்கோ டோக்கியோ ஜென்ரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் காப்பீட்டு நிறுவனம் மூலம் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ் கடன்பெறாத விவசாயிகள் அங்கீகரிக்கப்பட்ட பொது சேவை மையங்கள் (Common Service Centre), வணிக வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலமாக விரைவாக காப்பீட்டு செய்ய கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும், இத்திட்டத்தில் பதிவு செய்ய கடைசி நாள் **15.11.2021** எனவும் ஒரு ஏக்கருக்கான பிரீமியத் தொகை **ரூ.500.88** எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பயிர் காப்பீடு செய்வதற்கு இன்னும் 15 தினங்களே உள்ள நிலையில், விவசாயிகள் இறுதி நேரம் வரை காத்திருந்து ஏற்படும் சிரமங்களை தவிர்க்கவும். விவசாயிகளின் விண்ணப்பங்கள் விடுபடாமல் இருக்கவும் பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் காப்பீட்டுத் தொகையினை செலுத்தி முன் கூட்டியே பதிவு செய்யுமாறு மாவட்ட ஆட்சியர் டாக்டர்.அ.அருண் தம்புராஜ் அவர்கள் கேட்டுக் கொள்கிறார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**